அந்நாளிலே பிரமாணம் வெகுதூரம் பரவிப்போம். மீகா 7:11

# கிருபையின் மன்னா!

மன்னா – 2 பிப்ரவரி – 2018 மலர்–13

## சபைக்குத் தேவன் தரும் மன்னா

### அழைப்பு

உலகப்பிரகாரமாக மக்கள் தங்கள் வீடுகளில் ஒரு விசேஷம் நடைபெறவிருக்கும்போது, தாங்கள் யாரையெல்லாம் தெரிந்து கொள்ளுகிறார்களோ அவர்களை அழைத்து, விருந்து கொண்டாடுவார்கள். ஆனால், வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள அழைப்பு அதுவல்ல. I கொரி. 1:26-29 வரையுள்ள வசனங்களை வாசிப்போமானால், நாம் அழைக்கப்பட்ட அழைப்பு என்ன என்பது தெளிவாகப் புரியும்.

அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல், கொரிந்து சபைக்கு எழுதும் முதலாம் நிருபம், முதலாம் அதிகாரத்தில், “சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்;...” என்று 26ஆம் வசனத்தில் எழுதுகிறார். இங்கு அவர், தேவனுடைய தெரிந்துகொள்ளுதலைக் குறித்து எழுதுகிறார். தெரிந்துகொள்ளப்படுகிறவர்கள் ஞானிகளல்ல, பலமுள்ளவர்களல்ல, பொருள் உள்ளவர்களல்ல; மாறாக, பைத்தியமானவைகள், பலவீனமானவைகள், இழிவானவைகள், அற்பமாய் எண்ணப்பட்டவைகள், மற்றும் இல்லாதவைகள் - இவர்களையே தெரிந்துகொண்டார். ஏன் அவ்வாறு செய்தார்? மாம்சமான ஒருவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடி அப்படிச் செய்தார் (I கொரி. 1:26-29). மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டவேண்டும் என்று அவர் கூறுகிறார் (வச. 30).

தேவன் தாம் தெரிந்துகொண்டவர்களுக்கு அழைப்பைக் கொடுக்கிறார். அது, எவ்வெவ்விதங்களில் வரும் அழைப்பு என்பதைக் கீழே காண்போம்.

## 1. பரம அழைப்பு – The heavenly calling

எபிரெயர் 3:1

மண்ணினால் உருவாக்கப்பட்ட நாம் யாவரும், மண்ணான இப்பூமியில் வாழ்கிறவர்களாயிருப்பினும், பரலோகத்தை நாடிச்செல்ல வேண்டியவர்கள். நாம் இங்கு நிரந்தரமாக இருக்கப்போவதில்லை. ஏனெனில், நாம் பரலோகத்திற்குரியவர்கள். இயேசுவும் தம் சீஷரைக் குறித்துப் பிதாவிடம் பேசுகையில், அவர்கள் இவ்வுலகத்திலிருப்பினும் உலகத்திற்குரியவர்களல்ல என்று கூறினார். ''நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல" என்று யோவான் 17:16இல் கூறியுள்ளார்.

நம்முடைய உள்ளான மனுஷனின் கண்கள் இவ்வழைப்பைக் காணும்படியாகத் திறக்கப்படவேண்டும். பவுல் அப்போஸ்தலனின் கூற்று என்ன? "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடு கூட எழுப்பி, உன்னதங்களிலே (in heavenly places) அவரோடு கூட உட்காரவும் செய்தார்" என்பதே (எபே. 2:7).

அன்பானவர்களே, பரம அழைப்பிற்குப் பங்குள்ளவர்களாகிய நாம், பிரதான ஆசாரியராயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பார்க்கக் கடமைப்பட்டுள்ளோம் (எபி. 3:1). இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தில் சஞ்சரித்தபோதும், தம் பரமபிதாவைக் குறித்தும், பரலோகத்தைக் குறித்துமே அதிகமாகப் பேசினார் என்று காண்கிறோம். நாம் பரலோகவாசிகளாயிருக்கும்பொருட்டுச் சிருஷ்டிக்கப்பட்டுள்ளோம். பிதாவாகிய தேவனோடும், அவருடைய குமாரனாகிய இயேசுவோடும் பரலோகில் நித்தியமாக வாழும்படிக்கே அழைக்கப்பட்டுள்ளோம். அல்லேலூயா!

## 2. பரிசுத்த அழைப்பு – The holy calling

I தெசலோனிக்கேயர் 4:7

தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். அதன்பொருள் என்னவெனில், நாம் அசுத்தமான ஜீவியம் செய்ய அழைக்கப்பட்டவர்களல்ல. நாம் பரலோகவாசிகளாக இவ்வுலகில் ஜீவிப்பதினால், நம் அந்தரங்க வாழ்க்கையிலும் பரிசுத்தம் காணப்படவேண்டும். ''பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே'' என்று எபி. 12:14இல் வாசிக்கிறோமல்லவா? முதலாவது, நம் இருதயத்தில் பரிசுத்தமிருக்கிறதா என்று சோதித்துப் பார்க்க வேண்டும். "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" (மத். 12:34) என்று

கூறப்பட்டுள்ளபடி, இருதயம் பரிசுத்தமாயிருந்தால் நம் வாயின் வார்த்தைகளும் பரிசுத்தமாயிருக்கும். மத். 5:8இல் இயேசு என்ன கூறினார்? “இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்” என்றாரல்லவா? தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், நம் ஆவி, ஆத்துமா, சரீரம் முற்றிலும் பரிசுத்தமாயிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

நம் சரீரம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறது (II கொரி. 6:16). பரிசுத்த தேவன் வாசம்பண்ணும் நம் சரீரத்தில் அசுத்தம் காணப்படலாமா? கூடாதே. நம் சிந்தனைகளும் பரிசுத்தமாக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். ஆகவேதான் பரிசுத்த பவுல் தம் நிருபத்தில் இவ்வாறு எழுதுகிறார்; ‘‘அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம் பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே” (II கொரி 6:14-16).

பரிசுத்ததேவன் நம்மிடம் பரிசுத்தத்தை விரும்புகிறபடியால் நாம் நம் சரீரத்தின் அவயவங்களெல்லாவற்றிலும், இருதயத்திலும், சிந்தையிலும் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்வோமாக.

**3. நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடு சகிக்கும்படியாக அழைப்பு - The call to be patient when you suffer for doing good**

I பேதுரு 2:20, 21

நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்கு வல்லமையும் அதிகாரமும் இருந்தபோதிலும், அவர் பாடுபடும்போது அவற்றை உபயோகிக்கவில்லை. கள்ளனைப் பிடிப்பதுபோன்று இரவில் வந்து அவரைப்பிடித்தபோது, அவரோடிருந்தவர்களில் ஒருவன், பிரதான ஆசாரியனின் வேலைக்காரனைக் காதற பட்டயத்தால் வெட்டினான். அப்பொழுது இயேசு அவனைப்பார்த்து, பட்டயத்தை உறையில் போடச்சொல்லிவிட்டு, “நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரெண்டு லேகியோனுக்கும் அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று

நினைக்கிறாயா?" என்று கேட்டார். நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்த இயேசு, பாடுகளின் மத்தியிலும் பொறுமையாயிருந்து எல்லாவற்றையும் சகித்தார். நாமும் அவ்வாறே நன்மைசெய்து, பொறுமையாகப் பாடுகளைச் சகிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம்.

### 4. சமாதானமாயிருக்கும்படிக்கு அழைப்பு - The call to peace

I கொரி. 7:15

மனிதராகப் பிறந்த நாம் சமாதானமற்ற வாழ்க்கை வாழ்வது தேவசித்தமல்ல. ஏனெனில், தேவன் இயேசு கிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு அனுப்பின காரணங்களில் ஒன்று, நமக்குச் சமாதானம் அருளும்படிக்கே. இயேசுவின் பிறப்பை மேய்ப்பர்களுக்கு அறிவித்த தேவதூதனுடன் சேர்ந்து ஒரு கூட்டம் தேவதூதர்கள், "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், **பூமியிலே சமாதானமும்,** மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" என்று சொல்லி தேவனைத் துதித்தார்களென்று, லூக்கா 2:14இல் வாசிக்கிறோமல்லவா?

சில குடும்பங்களில் கணவர் இரட்சிக்கப்பட்டிருப்பார். ஆனால் மனைவி இரட்சிக்கப்படாமலிருப்பாள். அதே போன்று, மனைவி இரட்சிக்கப்பட்டு, கணவர் இரட்சிக்கப்படாமலிருக்கக்கூடும். அத்தகைய வீடுகளில் குடும்ப ஜெபம் செய்வதில், வேதம் வாசிப்பதில், ஆலயத்திற்குப் போவதில் அநேகமுறை மனஸ்தாபம், சண்டையிடுவது போன்றவற்றால் சமாதானமற்ற நிலை ஏற்படுவதுண்டு. ஆனால் சமாதானத்தை நாடும் கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, தர்க்கங்களைத் தவிர்த்து, அமைதிகாக்க வேண்டும். இரட்சிக்கப்படாத கணவனை இரட்சிப்புக்கு வழிநடத்த, மனைவி பொறுமையாக இருத்தல் அவசியம். மனைவியின் நல் நடத்தையைப் பார்த்து, கணவன் எப்படியும் இரட்சிக்கப்படுவான். அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசெயர் 3:18இல், ''மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்" என்று தெளிவாகக் கட்டளையிடுகிறார். கீழ்ப்படிவதும், பொறுமையாக எல்லாவற்றையும் சகித்துக்கொள்வதும், அன்புடன் பணிவிடை செய்வதும் குடும்பத்தில் சமாதானத்தைப் பெருகப் பண்ணும் என்பதில் சந்தேகமில்லை. சமாதானமாயிருக்கும்படிக்கு அழைப்பைப் பெற்றுள்ளோம்.

### 5. ஒரே சரீரமாக அழைப்பு – The call to live as one body

கொலோசெயர் 3:15

கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார். நாமெல்லாரும்

அவருடைய சரீரத்தில் அவயவங்களாயிருக்கிறோம். நம் சரீரத்திலுள்ள அவயவங்கள் எவ்வாறு ஒன்றோடொன்று ஒற்றுமையாக, இணைந்து செயல்படுகின்றனவோ, அவ்வாறே கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவங்களாயிருக்கும் நாமும் சபை மக்களோடு அன்பையும் நல்லுறவையும் பரிபாலிக்கவேண்டும்.

ஒரு மனிதனின் சரீரத்திலுள்ள அவயவங்கள், தலையானது என்ன கட்டளை கொடுக்கிறதோ அதைத்தான் நிறைவேற்றுகின்றன. அவை தங்கள் விருப்பம்போல ஒருபோதும் செயல்படுவதில்லை. அதைப்போன்றே, கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவங்களாயிருக்கும் நாமும், தலையாகிய கிறிஸ்து நமக்குக் கொடுக்கும் கட்டளைகளை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

ஆகையால், நாமெல்லாரும் கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவங்களாயிருக்கிறோமென்பதை உணர்ந்து, ஒருவரோடொருவர் அன்பாகவும் ஒற்றுமையாகவும் இருக்கவேண்டும். சரீரத்தில் ஒரு அவயவம் பாடுபடும்போது, பிற அவயவங்களெல்லாம் எவ்வாறு அதனுடன் பாடுபடுகின்றனவோ, அவ்வாறே நாமும் ஒருவரோடொருவர் அன்பினால் கட்டப்பட்டவர்களாயும், ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கிறவர்களாயும் காணப்படவேண்டும்.

பவுல் அப்போஸ்தலன் கொலோசெயருக்கு எழுதும் நிருபத்தில் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்: “நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும், தரித்துக்கொண்டு, ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்” (கொலோசெயர் 3:12,13).

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, நாம் பரலோகவாசிகளாய் இருக்கும்படி அழைக்கப்பட்டவர்கள். ஆகையால், நாம் இவ்வுலகில் வாழும்போதே நாம் எதற்காக அழைக்கப்பட்டோம் என்பதை நினைவில் கொண்டு, பரிசுத்தமாயும், நன்மைசெய்து பாடுபட ஆயத்தமுள்ளவர்களாயும், சமாதானத்துடன் வாழுபவர்களாயும், தேவ அன்பினால் கட்டப்பட்டவர்களாயும், இயேசுவின் சரீரமாகவும் இருக்கும்படியான அழைப்பைப் பெற்றுள்ளதை உணர்ந்து, பரிசுத்தமாய் ஜீவிப்போமாக.

கர்த்தர் தாமே உங்களனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

# நல்ல போராட்டம்

## (யாத். 17:8 முதல் 16 வரை வாசிக்கவும்)

இவ்வேத பகுதியில் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேல் புத்திரர் போராடினதோர் போராட்டத்தைக் குறித்து வாசிக்கிறோம். இப்போர் புதிய ஏற்பாட்டுக்கால பரிசுத்தவான்களின் ஆவிக்குரிய போராட்டத்திற்கு நிழலாக அமைந்துள்ளது. நாம் அறிந்தபடி இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு தேவதாசனும், தான் இரட்சிக்கப்பட்ட வேளையினின்றே ஆவிக்குரிய போர்க்களத்தில் நிறுத்தப்பட்டுள்ளான். இதன்பின்னர் இவன் போர்க்களத்தில் நிறுத்தப்பட்டுள்ள நாளளவும் சத்துருவை எதிர்த்துப் போராடவேண்டும். இந்தப்போர் மாம்சத்தின்படியிராமல், ஆவிக்குட்பட்டதாக இருப்பதினால், இதனை நல்ல போராட்டம் என்று அப்போஸ்தலனாகிய பவுல் அழைக்கிறார்.

பிரியமானவர்களே, இந்த நல்ல போராட்டத்தைப் போராடி சத்துருவை ஜெயித்து, தேவமகிமையைத் தரித்துக்கொள்வதற்காகவே தேவன் நம்மை அழைத்தார். இத்தேவ நோக்கம் நிறைவேற ஏதுவாக இஸ்ரவேலரின் போரை ஆதாரமாகக் கொண்டு, நமக்கு முன் நிறுத்தப்பட்டுள்ள இந்நல்ல போராட்டத்தைக் குறித்துச் சற்று தியானிப்போமாக.

**1. போரில் நம் சத்துரு :**

“அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரவேலரோடே யுத்தம் பண்ணினார்கள்” (யாத். 17: 8).

சத்துரு அல்லாத போர் இல்லை. எவ்வித போருக்கும் சத்துரு உண்டு. இங்கேயும் இஸ்ரவேலருக்கு விரோதமாக அமலேக்கியர் வந்ததாகக் காண்கிறோம். நம் ஆவிக்குரிய போரின் சத்துரு எழுத்தின்படி அமலேக்கு அல்ல, ஆவியின்படி அமலேக்கு. இந்த அமலேக்கு யார்?

அமலேக்கு என்பவன் ஏசாவின் சந்ததியில் எழும்பியவன் (ஆதி. 36:12). ஏசா ரெபெக்காளின் கர்ப்பத்தினின்று முதலில் வெளிப்பட்டவன் (ஆதி. 25:25).

அமலேக்கு முந்தி வெளிப்பட்டவனாகிய ஏசாவின் சந்ததியைச் சார்ந்தவனாகையால், எண். 24:20இல், ‘‘அமலேக்கு முந்தி எழும்பினவன்” என்று சொல்லப்பட்டுள்ளது. ஆவியின் பொருளின்படி பார்ப்போமானால் முந்தி எழும்புவதெல்லாம் மாம்சம். உதாரணமாக, இஸ்மவேல் முந்தி வெளிப்பட்டவனாகையால் மாம்சத்திற்கு

அடையாளமாய் இருக்கிறான். ஈசாக்கு பிந்தி வெளிப்பட்டவனாகையால் ஆவிக்கு அடையாளமாய் இருக்கிறான். இவ்வண்ணமே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துவானான் (மாம்சம்). பிந்தின ஆதாம் (இயேசு கிறிஸ்து) உயிர்ப்பிக்கிற ஆவியானார் (ஆவி) (1கொரி. 15:45, 46).

இதினின்று அமலேக்கு என்பதின் பொருள் மாம்சம் என்று அறிகிறோம்.

ஆம்! எப்போதுமே ஒரு ஆவிக்குரிய மனுஷனுக்குச் சத்துருவாயிருப்பது அவனது சொந்த மாம்சமே. மாம்ச எண்ணங்கள், மாம்ச சுபாவங்கள், மாம்சத்தின் கிரியைகள், எழும்பி ஆவிக்குரிய ஜீவியத்தை மடங்கடிக்கின்றன. இதனால், “ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்” என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார் (ரோமர் 8:13).

மாம்சத்தின் செய்கைகளை அழிப்பதென்பது, மாம்சத்தை வல்லமையற்றதாக்குவதனைக் குறிக்கிறது. மாம்சம் தன் சோதனையைக் கொண்டுவரும்போதெல்லாம் அதனை அழித்துக்கொண்டே இருப்போமானால், மாம்ச சோதனை தனது வல்லமையை இழக்கின்றது. இதற்கு எப்போதும் மாம்சத்தைக் குறித்த எச்சரிப்பு அவசியம். எந்த வேளையில் மாம்ச சோதனை ஏற்படுமோ, நமக்குத் தெரியாதாகையால் இரவும், பகலும் மாம்சத்தைக் குறித்து எச்சரிப்பாயிருக்க வேண்டும். தேவனோடு சஞ்சரிக்கும் பரிசுத்தவானாக இருந்தாலும், தான் போர்க்களத்தில் காணப்படும் நாளளவும், தன் மாம்சத்தைக் குறித்து ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். விசேஷமாக, தான் விரும்பும் ஜெயத்தினை அடைந்த அடுத்த நிமிடம் அதிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். சில சமயங்களில், ஜெயத்திற்காக அதிகமாக ஜெபிப்போம். ஜெயம் கைகூடிய பின்னர் ஜெயத்தின் பயத்தோடு மகிழவேண்டும். ஏனெனில், இந்தத் தருணத்தில்தான் சத்துரு புத்தியீனத்தைக் கொண்டுவந்து, நம்மைத் தவறிவிழச் செய்வான். இதுகாறும் தேவ சமுகத்தில் ஜெயத்திற்காக அழுதவர்கள், ஜெயம் கிட்டியவுடன், தன் சாமர்த்தியத்தினால் ஜெயத்தைப் பெற்றுக் கொண்டதாக எண்ணி, பெருமிதம் கொள்ள ஏவுவான். ஆகவே, சத்துருவைக் குறித்து விழிப்புடன் போராட வேண்டும்.

இன்னும் நம் சத்துருவினுடைய சூழ்ச்சிகளில் ஒன்று, அவன் போரில் பாளயத்தில் பின்னணியில் இருப்பவர்களைத்தான் வீழ்த்துவான். (உபாகமம் 25:17,19ஐ வாசிக்கவும்). பின்னணியில் இருப்பவர்கள் அனைவரும் பெலவீனர். இவர்கள் தேவகட்டளைக்குக் கீழ்ப்படிந்து, தேவ ஒத்தாசை பெற்று, போரில் சத்துருவை ஜெயிக்க முன்னேறுவதைவிட்டு

விட்டு, தேவ கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய பயந்தவர்களாக, சத்துருவுக்குப் பயந்து பின்னணியில் இருப்பவர்கள். இப்படிப்பட்டவர்களைத்தான் அமலேக்கும் வெட்டுவான். தளர்ந்தவர்களைத் தோற்கடிப்பதில் நம் சத்துரு தேறினவன். ஆனால், போரில் நேருக்கு நேர் நின்று, தேவ பெலத்தின் மேல் சார்ந்து போராடுபவர்களை அவன் எதிர்ப்பதில்லை. எனவே, சத்துரு நம்மைத் தந்திரமாகத் தாக்காவண்ணம் முன்னணி கிறிஸ்தவர்களாக நிற்போம். சத்துருவின் தந்திரங்களை அறிந்து போராட, தேவன் தாமே ஞானத்தையும், கிருபையையும் அருளுவாராக!

## 2. போர் செய்யும் முறை

அப்பொழுது மோசே யோசுவாவை நோக்கி, "நீ நமக்காக மனிதரைத் தெரிந்துகொண்டு புறப்பட்டு, அமலேக்கோடே யுத்தம் பண்ணு; நாளைக்கு நான் மலையுச்சியில் தேவனுடைய கோலை என் கையில் பிடித்துக் கொண்டு நிற்பேன்" என்றான். யோசுவா, தனக்கு மோசே சொன்னபடியே சென்று அமலேக்கோடே யுத்தம் பண்ணினான்" (யாத். 17:9-12).

இந்த யுத்தத்தில் யோசுவா பாளயத்தில் போராடும்போது, மோசே தேவனுடைய கோலைக் கையில் பிடித்தவராக மலையின் மீது நின்றான் எனக் காண்கிறோம். இவ்வண்ணமே, நம் ஆவிக்குரிய போராட்டத்திலும், இவ்விரண்டு கிரியைகளும் அவசியம். 'மோசே' என்பது ஜெப ஜீவியத்தையும், 'யோசுவா' விசுவாசத்தின் கிரியையும் காட்டுகிறது.

ஜெபம் இல்லாமல் ஆவிக்குரிய ஜீவியத்தில் வெற்றி காண்பதென்பது இயலாத காரியம். ஏனெனில், ஜெபம் நம்மை விழிப்பாக நிறுத்துவதோடு, தேவனோடுள்ள ஐக்கியத்தையும் அதிகப்படுத்துகிறது. ஆனால் நாம் ஜெபிக்கும்போது, மோசே தனது கையில் தேவனுடைய கோலைப் பிடித்திருந்ததைப் போன்றே நாமும் ஆவியின்படி தேவகோலாகிய வாக்குத்தத்தங்களைப் பிடித்து ஜெபிக்க வேண்டும். ஏனெனில், தேவன் தமது வாக்குகளைக் குறித்து வைராக்கியமுள்ளவர். அவரது வாக்குகளைப் பிடித்து ஜெபிக்கும்போது, அவர் தமது வாக்கை நிச்சயம் நிறைவேற்றுவார்.

மோசே மலையின்மீது கோலைப் பிடித்துக்கொண்டிருந்தால் மட்டும் ஜெயம் பெற்றுவிட முடியாது. யோசுவாவும் பாளயத்தில் போராடவேண்டும். இவ்வண்ணமே நாம் வாக்குத்தத்தங்களைப் பிடித்துக்கொண்டு ஜெபித்தால் போதாது. விசுவாசத்துடன் கிரியை செய்யவேண்டும்.

இவ்வாறு மோசே தனது கைகளில் தேவனுடைய கோலை உயர்த்திப் பிடித்தமையால் அவனுடைய கைகள் தளர்ந்தது. அப்போது ஆரோனும் ஊரும் மோசேயின் கைகளைத் தாங்கியதாக வாசிக்கிறோம். சோதனைகள் பெருகி வரும்போது நம் கைகள் தளருவது இயல்பே. ஆனால்,

சோருங்காலத்தில் கைகளை உயர்த்திவிடுவது உன்னத நோக்கும், விடுதலையுமே.

| | | |
|---|---|---|
| ஆரோன் | = | உன்னத நோக்கம் |
| ஊர் | = | விடுதலை |

"கீழான பாதாளத்தை விட்டு விலகும்படி, விவேகிக்கு ஜீவ வழியானது உன்னதத்தை நோக்கும்வழியாம்" என்று சாலொமோன் ஞானி கூறுகிறார் (நீதி. 15:24).

நாம் பரிசுத்த ஆவியைப் பெற்ற விவேகிகள். நமது நோக்கம் ஜீவவழியில் பதிக்கப்பட்டிருக்கவேண்டும். இந்த உன்னத நோக்கம் குறைகிற வேளையிலே நாம் சோர்வடைய நேரிடுகிறது. இதனால் சத்துரு நம்மை மேற்கொள்ளுவான். ஆகவே, எப்போதும் நம் நோக்கம் உன்னதத்தைப்பற்றியிருக்க வேண்டும். கீழான உலக காரியங்களை விரும்பி, அதிலேயே மனதைப் பதிக்கக்கூடாது. கூடியவரை உலக சிந்தைகளுக்கும் பாவங்களுக்கும் விலகியிருக்கவேண்டும். சில சகோதர சகோதரிகள் வேண்டாத உலக பாரங்களையும், கவலைகளையும் தங்கள் மேல் சாற்றிக்கொண்டு கண்ணீர் வடித்துக் கொண்டிருப்பார்கள். இன்னும் தங்கள் பிள்ளைகளைக் குறித்தும், வருங்காலத்தைக் குறித்தும் வீணாகப் பாரப்படுவார்கள். இவர்கள் அடிக்கடியாகக் களைத்துப் போவதால் சத்துருவினால் மடங்கடிக்கப்படுகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட உலக கவலைகளுக்கு, உலக நோக்கங்களுக்கு விலகியிருப்போமாக.

இன்னும் நம் கைகள் தளராதிருக்க, விடுதலையும் அவசியம். "கர்த்தருடைய ஆவி எங்கேயோ, அங்கே விடுதலையுமுண்டு" என்று வேதம் கூறுகிறது. இந்த விடுதலை, சரீரத்தில் மட்டுமுள்ள விடுதலையல்ல. ஆவியிலேயும் உள்ள விடுதலை. அதாவது, திறந்த முகமாய்த் தேவனை நோக்கும் விடுதலை. சில விசுவாசிகளும்கூட ஆபத்திலே தேவனைத் திறந்தமுகமாக நோக்க அஞ்சுவார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்கள் குறைகளை அறிக்கைசெய்து, நல்மனம் பொருந்தி, பிறகுதான் தேவனை விடுதலையோடு நோக்க முடியும். ஆவிக்குரிய போராட்டத்தில் இந்நிலைமையும் நம்மைத் தளர்ச்சிக்குள் ஆக்குகிறது. எந்த நேரமானாலும், இரவாகிலும் பகலாகிலும் தேவமுகத்தை விடுதலையோடு, மனச்சாட்சி எவ்வண்ணமும் குற்றப்படுத்தாமல், தேவையான வேளைகளிலெல்லாம் தேவனை நோக்கிக் கூப்பிடும் விடுதலை அவசியம். ஆவிக்குரிய இப்போராட்டத்தில் ஜெயமாகப் போராட, ஜெப ஜீவியம், விசுவாசக்கிரியை, உன்னதநோக்கம், விடுதலை இவற்றைத் தேவன் தாமே தந்தருளுவாராக.

### 3. ஜெயத்தின் இரகசியம்

பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி; இதை நினைவுகூரும்பொருட்டு, நீ ஒரு புத்தகத்தில் எழுதி, யோசுவாவின் செவிகேட்கும்படி வாசி. அமலேக்கை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன் என்றார். மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு யேகோவா நிசி என்று பேரிட்டு (யாத். 17:14,15),

இங்கு, சத்துரு முற்றிலும் அழிக்கப்படும் முன்னரே மோசே பலிபீடம் கட்டி அதற்கு "யேகோவா நிசி" என்று பேரிட்டான். "யேகாவா நிசி" என்பதற்கு, "கர்த்தர் என் ஜெயக்கொடி" என்பது பொருள். பொதுவாக, சத்துருவை முற்றிலும் முறியடித்து, இனி சத்துருவால் யுத்தமில்லை என்று கண்ட பின்னர்தான் ஒரு ஸ்தம்பமோ அல்லது கல்லோ நாட்டி, ஜெயத்தைக் கொண்டாடுவார்கள். ஆனால் இஸ்ரவேலரின் யுத்தத்திலோ சத்துரு அழிக்கப்படும் முன்னரே ஜெயக்கொடி நாட்டப்பட்டதைக் காண்கிறோம். ஆம்! இதுவே விசுவாசத்தின் ஜெயக்கொடி. ஆவிக்குரிய போரில் பறக்க வேண்டிய ஜெயக்கொடி. நம் போராட்டம் முடியாவிடினும், கர்த்தர் என் ஜெயக்கொடி என்று தைரியத்தோடு அறிக்கையிடலாம். ஜெயம் நமதாயிருக்கையில் நாம் போரைக் கண்டோ, சத்துருவைக் கண்டோ பயப்பட வேண்டிய அவசியமில்லை. பிரியமானவர்களே! நம் யுத்தம் கொடுமையானதாக இருந்தாலும் நமக்காக யுத்தம் செய்பவரிடம் அதை ஒப்புக்கொடுப்போம். அவர் தகுந்த ஆலோசனைகளைத் தந்து, தமது பெலனையும் ஈவார். யுத்தம் கர்த்தருடையது, ஜெயமோ நம்முடையது. விசுவாசத்துடன், "கர்த்தர் என் ஜெயக்கொடி" என்று அறிக்கையிடுவோமாக!

பிரியமானவர்களே! இதுவரை நாம் செய்யவேண்டிய நல்ல போராட்டத்தைக் குறித்தும், போராடவேண்டிய முறைகளைக் குறித்தும் கவனித்தோம். இப்போராட்டத்தை நல்ல போராட்டம் என்று அழைத்த அப்போஸ்தலன், தன் போராட்டத்தை முடித்து வெற்றிக்கிரீடம் சூடும் நேரம் சமீபித்தபோது, "நல்ல போராட்டம் போராடினேன்" என்று கூறுகிறார். சகோதரரே! உங்கள் போராட்டத்தை முடிக்கும்போது "நல்ல போராட்டம் போராடினேன்" என்று சொல்ல முடியுமா? இன்று உங்கள் போராட்டம் நல்ல போராட்டமாகத்தான் உள்ளதா? சற்று சிந்திப்பீராக!

தேவ ஆவியானவர் வெளிப்படுத்தினபடியே நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் போராட்டத்தை வெற்றியோடு முடிக்க தேவன் தாமே அருள்புரிவாராக!

# நிருபனின் நிருபம் ✍

ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இணையற்ற நாமத்திலே மன்னா வாசகர்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். புத்தாண்டின் பசுமையில் இருக்கின்ற நம் ஒவ்வொருவரையும் நமது தேவன் தாமே ஓங்கி வளருகின்ற கேதுருவைப் போல, எல்லா நிலைகளிலேயும் இவ்வாண்டில் வளரச்செய்து நம்மைக்கண்டு மகிழ்வாராக.

‘‘முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்” என்ற வசனத்தின்படி (மத்தேயு 6:33), இவ்வாண்டின் துவக்கத்திலிருந்தே நம்முடைய எல்லா நிலைகளிலேயும் முதலாவது தேவனுக்கடுத்தவைகளைத் தவறாமல் தேடுவோமாகில், கூடுதலான ஆசீர்வாதங்களை நமக்கு அளவில்லாமல் தருவார் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

மேலும், இவ்வாண்டின் துவக்கத்தில் தேவன் திருச்சபைக்குத் தந்த வாக்குத்தத்தமாகிய, “அவர்கள் அவருடைய தேசத்தில் ஏற்றப்பட்ட கொடிகளின் கிரீடத்தில் பதிந்திருப்பார்கள்” (சகரியா 9:16) என்பதின்படியே இவ்வாண்டு முழுவதும் நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் அவருடைய பார்வையில் பிரகாசிக்கின்ற, பதிக்கப்பட்டக் கல்லாக ஜொலிப்பதாக.

பத்திரிகை ஊழியத்தில் இரண்டாம் ஆண்டு அடி எடுத்து வைத்துள்ள “கிருபையின் மன்னா” இவ்வாண்டும் தடையில்லாமல் வெளியிடப்படவும் இன்னும் அநேகர் இதன்மூலம் பயனடையவும் நீங்கள் ஜெபிக்கும்படி வேண்டுகிறேன். தவறாமல் மற்றவர்களுக்கும் இதை அறிமுகப்படுத்துங்கள்.

‘‘நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்’’ (எபேசியர் 5:17). கிருபை உங்களோடிருப்பதாக.

புத்தாண்டில் பரமனின் சேவையில்
உங்கள் ஊழியன்
**எஸ். ஆனந்த்**

## DEPART

"Depart! Depart! Go out from there, touch no unclean thing; go out from the midst of her, be clean, you who bear the vessels of the Lord" (Isaiah 52:11).

This is a command given to the children of Israel whom God had chosen for Himself. This command echoes an urgency, since the word is repeated twice in the verse quoted. When the word 'depart' is used, it suggests an immediate action of moving out of the place. Once we postpone the action of departing, we shall be in trouble. We see the consequences of delayed action by Lot and his family in leaving Sodom which God was going to destroy by fire and brimstone.

Let us understand from Scriputres what we should depart from.

**1. Depart from the tents of wicked men—Numbers 16:26**

Those were the words of Moses to the children of Israel when Korah, Dathan and Abiram, along with 250 princes, rebelled against Moses and Aaron which infuriated God. When God wanted to destroy all the people, Moses pleaded with Him not to destroy the innocent with the guilty. So, it was decided to test who deserved to be punished. Moses told Korah and his company to bring their consers, and put incense in them; and he told Aaron also to do the same. They and Aaron put fire in their censers and brought them before the Lord. The Lord told Moses to separate the congregation from the rebels, and therefore, Moses said to them, ""Depart from the tents of these wicked men, ..." The people obeyed Moses. Then Moses told the people that if Korah and his company died the common death of all men, then the Lord had not sent him. But, if a new thing was done by the Lord, and if the earth opened its mouth and swallowed them up, it would be proof

enough that he was sent by God, and that the rebels had despised the Lord. The earth opened and swallowed up Korah, Dathan, Abiram and their families alive. The fire from the Lord came and consumed the others with their censers, for they had rebelled against Moses and Aaron.

God does not want you to remain in the place where wicked men live. Therefore He says, "Depart."

**2. Depart from hell beneath —Proverbs 15:24**

The word 'beneath' suggests that there are two divisions of hell - one, the upper part, and the other, the lower part. In Genesis 42:38 Jacob refers to the upper one, namely, Sheol. In Ps. 86:13. David speaks with confidence that the Lord has delivered him from the lowest hell. Jesus often spoke of hell where the fire would not be quenched, and the worms would not die.

To depart from hell (to avoid going to hell), one has to choose the way of life (eternal life) rather than the way of death. The Lord places before us both (Jeremiah 21:8), and we have to choose the way to eternal life.

Choosing the way to eternal life is easy, because all you need to do is, accept the Lord Jesus, who is the Way to eternal life, the Truth and the Life. You will have to confess your sins to Him and ask Him to forgive you. Jesus will forgive you and give you the joy of salvation (eternal life) in order that you can live with Him in heaven for ever.

**3. Depart from iniquity — II Timothy 2:19**

The apostle Paul writes to Timothy the young pastor that the Lord knows those who are His, and let everyone who names himself by the name of the Lord give up all iniquity. In other words, every one who calls himself a Christian should refrain from being unfair and wrong, and be righteous in his dealing with others.

Christians belong to two groups: 1. Professing Christians 2. Possessing Christians. The first group consists of nominal Christians who have not accepted Jesus as their Saviour. The second group consists of those who possess Christ in their hearts. Their ways are righteous, for they are Christ - like in nature.

In Job 15:16 we read, "How much more abominable and filthy is man, which drinketh iniquity like water?" We should have nothing to do with them, but depart from them.

Not all who call themselves Christians are Christians in the true sense of the word. Some are nominal Christians and they are unrighteous in their actions, whereas, true Christians have a Christ- like nature.

In Matthew 7:21-23 we see how Jesus Himself says, "Depart from me you workers of iniquity" to those who claim to have prophesied and done miracles, when He judges everyone on the 'Day of Judgment'. Let us be righteous so that Jesus will not use the word 'depart' to us on that day.

**4. Depart from evil — Psalm 34:14**

We live in a world which is filled with evil. Jesus prayed to the Father to keep His disciples from evil (John 12:15). The word 'evil' stands for Satan, who is the personification of evil, and it also signifies the evil nature of man. Man has a sinful nature, and therefore, he is often plagued with the lust of the eye, the lust of the flesh and the pride of life ( I John 2:16). Man can be delivered from the evil of the world if he fears God and prays for deliverance from worldly attractions and fashions which Satan uses to make man commit sin. To depart from evil which is rampant in the world, you should keep your life open before the eyes of the Lord. Shun evil ways, do good to

others and please God.

**5. Depart from the snares of death — Proverbs 14:27**

A snare is a device which is set to capture unwary animals and birds. These creatures cannot know that a snare is kept before them, and being attracted by the bait inside the snare, they step on it, and their feet get caught in it. This is what Satan does to Christians to distract their attention from Jesus, and he makes them get caught in the subtle device he keeps before them. He blinds their eyes so that they are unware of it.

Gehazi the servant of Prophet Elisha fell into the snare Satan had set for him. He ran after Naaman, who was healed of leprosy by Elisha, and telling a lie, asked him for a talent of silver and two changes of garments eventhough his master had refused to accept what Naaman offered him. The result was, Elisha cursed Gehazi, and Naaman's leprosy took hold of him and his descendants (II Kings 5:27).

King Solomon was beloved of the Lord, and the Lord gave him wisdom beyond measure and also riches which he never asked for. Solomon loved the Lord and built a magnificient temple for Him. The Lord gave him peace during His reign. But, since he married many women who were idol worshippers, he fell into the snare of Satan, and backslid from the Lord. (Please read Nehemiah 13:26).

Dear children of God, beware of lust for money, for it is evil. The Lord wants you to depart from the tents of wicked men, from hell beneath, from iniquity (unrighteousness), from evil, and from the snares of death.

May the Lord help you to overcome temptations.

# SMOOTH STONES FROM THE BROOK

## Who is Jesus?

Zoologists call Him
The Lion of Judah

Horticulturists call Him
The Tree of Life

Agriculturists call Him
The Good Seed

Geologists call Him
The Rock of Ages

Publishers call Him
The Author of Faith

Professors call Him
The Wisdom of God

Prisoners call Him
The Deliverer

Beauticians call Him
The Fairest of Ten Thousands

I call him my Saviour,
The Lover of my soul.

What do you call Him?

*"The Lord is nigh unto all them that call upon Him,*
*to all that call upon Him in truth."*
*Psalm 145:18*


*If undelivered please return to*

**A.C.A. K.K. Nagar Ministry,**
**No. 50, Kannigapuram 1st Street, K.K. Nagar, Chennai - 600 078.**
**Phone : 044-2366 2677 / Cell : 9444141944**
**Email : sanandaca@gmail.com**


L.R. Graphics, Ph : 2489 5236